DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 41/2020** |
| Deposition of witness | : | **PW-1** |
| Name | : | **வேலுமணி** |
| Father Name | : | **தங்கமுத்து** |
| Age | : | **51** |

**Accused present**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 25.02.2026.

## முதல் விசாரணை

1. நான் தற்போது ரெட்டைகிணறில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 04.09.2018 தேதியில், நான் வள்ளியப்பன் பாறையில் இருந்தபோது முத்துநாயக்கர் மற்றும் பெரியசாமி எனது வீட்டிற்கு நேரில் வந்து எனது அக்கா மகன் கோகுல் கண்ணன் என்பவருக்கு லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். எனது வீட்டிலிருந்து ஒரு கிலோமீட்டர் மேற்கே விபத்து ஏற்பட்டு இருந்தது.

2. நான் நேரில் சென்று பார்த்த போது எனது அண்ணன் மகனுக்கு நெஞ்சு, கை மற்றும் தலையில் பலத்த அடிபட்டு பேச்சு மூச்சு இல்லாமல் கிடந்தார். பின்னர் கொங்கு ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அவரை கொண்டு சென்றோம். அங்கு அவரை சோதித்துப் பார்த்துவிட்டு இறந்து விட்டதாக டாக்டர் சொன்னார்கள். அதன் பின்னர் ஊத்துக்குளி காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரியின் தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை .

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.02.25 18:04:43 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | CC 41/2020 |
| Deposition of witness | : | PW-2 |
| Name | : | துரைசாமி |
| Father Name | : | தெய்வசிகாமணி |
| Age | : | 49 |

**Accused present**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 25.02.2026.

முதல் விசாரணை

1. நான் தற்போது கொடியம்பாளையம் நால் ரோட்டில் வசித்து வருகிறேன். நான் பிளாஸ்டிக் கம்பெனி வைத்துள்ளேன். எனது உறவினர் கோகுல் கிருஷ்ணன் என்பவருக்கு 14.09.2018 தேதியில் விபத்து ஏற்பட்டதாக தெரிந்து அன்றைய தினம் காலை 11 மணியளவில் சம்பவ இடம் சென்ற போது போலீசார் அந்த இடத்தில் வரைபடம் வரைந்து விவரம் எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். நான் அதை படித்து பார்த்து கையப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் **(மேற்படி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரியின் தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை .

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.02.25 18:04:54 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.